| PG-106 | MAT-21 |
|---|---|

# M.A. DEGREE EXAMINATION – JUNE, 2018

## Second Year

## Tamil

### சங்க இலக்கியம்

Time : 3 hours　　　　Maximum marks : 75

பகுதி அ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்தனுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

1. திருமுருகாற்றுப்படையில் சுட்டப்படும் முருகன் எழுந்தருளியுள்ள இடங்கள் யாவை?

2. பட்டினப்பாலை வர்ணிக்கும் காவிரியின் அழகினை எழுதுக.

3. நற்றிணையில் இடம் பெறும் தலைவியின் தன்னிகரற்ற அன்பினைச் சுட்டுக.

4. குறுந்தொகைத் தலைவியின் இல்லறப் பாங்கைத் தருக.

5. ஐங்குறு நூற்றில் கபிலரின் கவித் திறத்தினைச் சுட்டுக.

6. பதிற்றுப்பத்த சுட்டும் பாணர்களின் வாழ்வு குறித்து எழுதுக.

7. கற்றறிந்தோர் ஏத்தும் கலி–ஏன்?

பகுதி ஆ — (5 × 10 = 50 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்தனுக்கு நான்கு பக்க அளவில் விடை தருக.

8. பட்டினப்பாலையின் வழி தமிழர் பெருமைகளை விவரி.

9. நற்றினையின் தனிச்சிறப்புகளை விளக்குக.

10. அகநானூறு அமைப்பு முறை, பாடற் சிறப்புகளை விவரி.

11. புறநானூறு உணர்த்தும் சங்க காலஆட்சிப் சிறப்பினை விவரி.

12. பதிற்றுப்பத்தின் சிறப்பு இயல்புகளை விளக்குக.

13. பரிபாடலில் இடம்பெறும் உவமைகளை விவரி.

14. கலித்தொகை முன் நிறுத்தும் தமிழர் வாழ்வியிலை விவரி.

———————

| PG–107 | MAT–22 |
|---|---|

# M.A. DEGREE EXAMINATION – JUNE, 2018.

## Second Year

## Tamil

### காப்பிய இலக்கியம்

Time : 3 hours — Maximum marks : 75

பகுதி அ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்தனுக்கு ஒரு பக்க அளவில் விடை எழுதுக.

1. பெருங்காப்பிய இலக்கணத்தை விளக்குக.
2. கண்ணகியின் தன்னிலை விளக்கத்தை எழுதுக.
3. மணிமேகலையின் வரலாற்றினைத் தொகுத்தெழுதுக.
4. சீவகன் பதுமையாரை மணத் கொண்ட விதம் பற்றி எழுதுக.
5. கும்பகர்ணன் இராவணனுக்குக் கூறிய அறிவுரைகளைப் புலப்படுத்துக.
6. பாரதப்போர் பற்றி நும் பாடப்பகுதி கொண்டு விளக்குக.
7. பெரியபுராணம் - நூற் குறிப்பு வரைக.

பகுதி ஆ — (5 × 10 = 50 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்தனுக்கு நான்கு பக்க அளவில் விடை எழுதுக.

8. புகார்க்காண்டம் காட்டும் சோழ நாட்டின் சிறப்பினை விளக்குக.

9. மணிமேகலையின் மாண்புகளை விரித்தெழுதுக.

10. அப்பூதியடிகளின் திருநாவுக்கரசர் பக்தியினை விளக்குக.

11. கும்பகர்ணனை எங்ஙனம் துயில் எழுப்பினர் என்பதை விவரிக்க.

12. கர்ணனின் பண்பு நலன்களைப் புலப்படுத்துக.

13. வீராமாமுனிவரின் காப்பியத்திறனை நும்பாடப்பகுதி வழி விரித்துரைக்க.

14. சீறாப்புராணத்தின் சிறப்புகளை நும் பாடப்பகுதி கொண்டு விளக்குக.

———————

| | |
|---|---|
| **PG–108** | **MAT-23** |

# M.A. DEGREE EXAMINATION –JUNE 2018.

## Second Year

இலக்கணம் : தொல்காப்பியம் - பொருளதிகாரம்

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்தனுக்கு ஒரு பக்க அளவில் விடை எழுதுக.

1. களவொழுக்க உணர்வுகளை வெளிப்படுத்துக.

2. வன்புறை, செலவழுங்கல் ஆகியவை பற்றி எழுதுக.

3. அறத்தொடு நிற்றலுக்குரிய கருத்துக்களை நிரல்படுத்துக.

4. வஞ்சித்திணையின் துறைகள் யாவை? இரண்டினை விளக்குக.

5. எண்வகை மெய்ப்பாடுகள் எவை என்று எழுதுக.

6. உவமத் தோற்றம் குறித்துச் சான்றுடன் உரைக்க.

7. இளமைப் பெயர்களாக மரபியல் உணர்த்துவன எவை?

பகுதி ஆ — (5 × 10 = 50 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்தனுக்கு நான்கு பக்க அளவில் விடை தருக.

8. அகத்திணை காட்டும் முதல், கரு உரிப்பொருள்களை விளக்குக.

9. வெட்சிப் போர் குறித்த செய்திகளை விரித்துரைக்க.

10. களவியலில் தலைவனுக்குக் கூற்று நிகழுமிடங்களை விவரிக்க.

11. கற்பியலில் தலைவி கூற்று நிகழுமிடங்களை வகுத்துரைக்க.

12. களவிலும், கற்பிலும் நிகழும் மெய்ப்பாடுகளைச் சுட்டுரைக்க.

13. செய்யுளியல் உணர்த்தும் செய்யுளுறுப்புகளைச் செப்புக.

14. மரபியல் குறிக்கும் நூல் பற்றிய மரபுகளைப் புலப்படுத்துக.

| PG–109 | MAT–24 |
|---|---|

# M.A. DEGREE EXAMINATION – JUNE, 2018.

Second Year

Tamil

ஒப்பிலக்கியம்

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்தனுக்கு ஒரு பக்க அளவில் விடை எழுதுக.

1. ஒப்பிலக்கியத்தின் பொதுக்கூறுகளை எழுதுக.

2. தமிழகத்தில் ஒப்பாய்வின் வளர்ச்சியினைச் சுருக்கியுரைக்க.

3. அறிவியல் கோட்பாடு பற்றி எழுதுக.

4. ஒப்பாய்வுக் களங்கள் எவையெனக் குறிப்பிடுக.

5. மேலைநாட்டுச் செவ்வியல் இலக்கியங்களைப் பற்றி எழுதுக.

6. இலக்கியத்தைக் கலையோடு எவ்வாறு ஒப்பீடு செய்யலாம்?

7. 'ஒப்பியல் திறனாய்வு' என்பதனைத் தெளிவுறுத்துக.

பகுதி ஆ — (5 × 10 = 50 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்தனுக்கு நான்கு பக்க அளவில் விடை எழுதுக.

8. ஒப்பிலக்கியத்தின் பயன்களை விளக்குக.

9. ஒப்பாய்வின் தோற்றம் குறித்துக் கட்டுரைக்க.

10. ஒப்பாய்வுக் கோட்பாடுகளை விளக்கியுரைக்க.

11. கவிதைகள் ஒப்பீடு குறித்துக் கட்டுரைக்க.

12. சங்க இலக்கியமும் உலக இலக்கியப் பொதுப்பண்புகளும் பற்றி விளக்குக.

13. ஒப்பாய்வின் வளர்ச்சியினை விளக்கியுரைக்க.

14. தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்கள் பற்றி விவரிக்க.

| PG–110 | MAT–25 |
|---|---|

# M.A. DEGREE EXAMINATION – JUNE, 2018

Second Year

Tamil

இலக்கியத் திறனாய்வும் படைப்பிலக்கியமும்

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்தனுக்கு ஒரு பக்க அளவில் விடை எழுதுக.

1. திறனாய்வு குறித்த மேலைநாட்டார் கருத்துகளை எழுதுக.

2. இலக்கியத்தில் கற்பனைக் கூறுகள் பற்றி எழுதுக.

3. காப்பியங்களில் உள்ள இலக்கிய உத்திகளைப் புலப்படுத்துக.

4. திறனாய்வு நுண்கூறுகளைத் தெளிவுபடுத்துக.

5. புதினம் எழுதுவதற்கான விதிகளை எழுதுக.

6. நனவோடைமுறை குறித்து எழுதுக.

7. இரசனைமுறைத் திறனாய்வு அல்லது பாராட்டுமுறைத் திறனாய்வு பற்றி எழுதுக.

பகுதி ஆ — (5 × 10 = 50 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்தனுக்கு நான்கு பக்க அளவில் விடை எழுதுக.

8. திறனாய்வாளரின் தகுதிகளைப் பட்டியலிடுக.

9. திறனாய்வு அணுகுமுறைகளைத் தெளிவுறுத்துக.

10. இலக்கிய இயக்கங்கள் குறித்துக் கட்டுரைக்க.

11. இலக்கிய விளக்கங்களும் தன்மைகளும் குறித்துக் கட்டுரைக்க.

12. புதுக்கவிதைகள் ஆய்வு குறித்து விரித்துரைக்க.

13. திரைக்கதை எழுதும் முறையினை விரித்தெழுதுக.

14. படைப்பாற்றலும் துய்த்தலும் பற்றி விளக்குக.